**சுருக்கம்**

பாசனம் – பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் – கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு அணையிலிருந்து ஆழியாறு படுகைப் பாசனப் பகுதிகளுக்கு 7.09.2011 முதல் தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (க்யூ1) துறை**

**அரசு ஆணை (வாலாயம்) எண்.383** **நாள்: 6.09.2011**
**ஆவணி 20,**
**திருவள்ளுவராண்டு 2042**

**படிக்கப்பட்டது:**

1 தலைமைப் பொறியாளர், கோயம்புத்தூர் மண்டலம், நீர்வள ஆதாரத் துறை, கடித எண்.தொநுபி / உசெபொ1 / உபொ.1 / கோ.1593 (2) / 2011, நாள் 10.08.2011.

2 கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண் ந.க. 13901/2011/ஈ 1, நாள் 18.08.2011.

-----

**ஆணை:–**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆழியாறு படுகை பாசனப் பகுதிகளான (தொகுப்பு–I) பொள்ளாச்சி கால்வாய் ‘ஆ மண்டலத்தில் 11,942 ஏக்கர், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் ’அ’ மண்டலத்தில் 5,558 ஏக்கர் பாசனத்திற்காக 7.9.2011 முதல் மற்றும் சேத்துமடைக் கால்வாய் ’ஆ’ மண்டலத்தில் 2,529 ஏக்கர் மற்றும் ஆழியார் ஊட்டுக் கால்வாய் ’ஆ’ மண்டலத்தில் 2,303 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்கு 30.9.2011 முதல் மொத்தம் 2,412 மில்லியன் கன அடிக்கு மிகாமல் 135 நாட்களில், உரிய இடைவெளிவிட்டு 75 நாட்களுக்கு ஐந்து சுற்றுகள் வீதம் ஆழியார் படுகைப் பாசனப்பகுதிகளுக்கு ஆழியார் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
தலைமைப் பொறியாளர், கோயம்புத்தூர் மண்டலம், நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர்–1.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
அமைச்சர் (பொதுப்பணி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை– 5.
இகோ/உந.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**